THE TITULAR ROMAN CATHOLIC BISHOP OF PENANG
DIOCESE OF PENANG
Catholic Diocesan Centre
290 Macalister Road, 10450 Georgetown, Pulau Pinang, Malaysia.
Tel: +604-2292761 / 2292742 Fax: +604-2285671
E-mail: trcb@pgdiocese.org / penangdiocese@gmail.com
Website: www.pgdiocese.org

***01 ஜூலை 2020*** **PKK/BDN/2020/07/049**

# <u>பத்திரிகை அறிக்கை</u>

புக்கிட் மெர்த்தாஜாம் புனித அன்னம்மாள் மைனர் பசிலிக்காவின் அதிகாரப்பூர்வ வலைத்தளம், இன்று ஜூலை 1ஆம் தேதி 2020, அதிகாரப்பூர்வமாக தொடங்கப்படும் புனித அன்னம்மாளின் யாத்திரையாளர்கள் மற்றும் பக்தர்கள் இப்போது புனித அன்னம்மாள் திருவிழா அட்டவணை மற்றும் நிகழ்வுகளை எளிதாக அணுகலாம், இந்த ஆண்டில் இதனை முழுமையாக நேரடி ஒளிபரப்பில் காணலாம்.

இந்த வலைத்தளம் இந்த ஆண்டு ஜூலை 24, 2020 - ஆகஸ்ட் 2, 2020 புனித அன்னம்மாள் திருவிழாவின் போது மிக சிறப்பான முறையில் ஒருவருக்கொருவர் இணைந்திருக்க ஒரு வழிமுறையாக இருக்கும், ஏனெனில் கோவிட்-19 தொற்றுநோய் பரவல் காரணமாக இந்த திருவிழாவின் போது உடல் ரீதியாக ஒன்றாக இருப்பது சாத்தியமில்லை.

இந்த ஆண்டு புனித அன்னம்மாள் திருவிழாவின் 10 நாட்களில் படைப்பு, உட்படுத்தல் மற்றும் பாலம் கட்டுதல் போன்ற வழிகளில் மற்றவர்களை நேசிக்கவும் சேவை செய்யவும் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர் முயற்சிகள் பின்வருமாறு:

1. ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் திவ்விய ஆராதனை மற்றும் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் நேரடியாக ஒளிபரப்பப்படும்
2. நவநாள் மற்றும் திருப்பலி பூசைகள் தேசிய மொழி, தமிழ், ஆங்கிலம் மற்றும் மெண்டரின் மொழிகளில் நேரடியாக ஒளிபரப்பப்படும்
3. திருத்தலத்தில் காணப்படும் புனித அன்னம்மாளின் அசல் சுரூபம் இந்த வளைத்தளத்தின் மூலம் நேரடியாகப் பார்க்கலாம்
4. திருயாத்திரையாளர்கள் மற்றும் பக்தர்கள் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றவோ, மலர் வளையங்கள் மற்றும் பூக்கள் வழங்கவோ, புனித அன்னம்மாளுக்கு மன்றாட்டு மனுக்கள் எழுத விரும்புவர்கள் இந்த டிஜிட்டல் (இலக்கியல்) வழியின் மூலம் செய்யலாம்
5. இந்த புனித அன்னம்மாளின் திருவிழாவின் போது ஒரு குருவானவருடன் பேசவோ, ஜெபம் அல்லது ஆசீர்வாதம் பெற விரும்பினால், ஒவ்வொரு நாளும் குருவானவர்கள் மற்றும் ஆயர் கூப்பிடும் தூரத்தில் தான் உள்ளனர்
6. தங்கள் போராட்டங்களையும் சந்தேகங்களையும் பகிர்ந்து கொல்லவும் அதனை காது கொடுத்து கேட்கும் ஆலோசனைக் குழுவின் சேவை உடனடியாக கிடைக்கும்
7. இந்த இணையதளத்தில் புனித அன்னம்மாளின் பரிந்துரையின் மூலம் அனைத்து மொழிகளிலும் தங்கள் அனுபவங்களையும் சாட்சியங்களையும் பகிர்ந்து கொண்டு உற்சாகமளிக்க திருயாத்திரையாளர்கள் மற்றும் பக்தர்கள் அழைக்கப்படுகிறார்கள், இதன் மூலம் மற்றவர்களும் ஊக்கம் பெறுவார்கள்.

2020-ஆம் ஆண்டின் புனித அன்னம்மாள் திருவிழாவின் நேரங்கள மற்றும் நிகழ்வுகளின் கூடுதலான பல விபரங்களை, இந்த வலைத்தளத்தில் காணலாம். புனித அன்னம்மாளின் சிறிய பசிலிக்காவின் மேல் விபரங்களை **www.minorbasilicastannebm.com** என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆராய்ந்து கண்டறியலாம்.

புனித அன்னம்மாளின் சிறிய பசிலிக்கா உண்மையிலேயே நல்லிணக்கத்தின் திருத்தலம் என்பதை உலகத்திற்கு சான்றுபகரும், புனித அன்னம்மாளின் எல்லா திருயாத்திரையாளர்களுக்கும் பக்தர்களுக்கும், பல்வேறு பின்னணியுடன் அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக்கொள்கிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

வழங்கியவர்: **மேதகு ஆயர் டத்தோ செபஸ்தியன் பிரான்சிஸ், D.D., DSPN**
பினாங்கு மறைமாவட்ட ரோமன் கத்தோலிக்க ஆயர்